بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿١﴾

# ஜுமுஆ பேருரை

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

**மொழியாக்கம் : மவ்லவி M. ரஃபீக் அஹ்மது சாஹிப்**

**May 23 2014**



Biatul Futuh, London

## அஹ்மதிய்யா ஜமாஅத் – ஒரு முன்மாதிரி

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ . اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ . مٰلِكِ يَوْمِ الدِّيْنِ . إِيَّاكَ نَعْبُدُ

وَإِيَّاكَ نَسْتَعِيْنُ . اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ . صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ .

وَمَا كَانَ لِنَفْسٍ اَنْ تَمُوْتَ اِلَّا بِاِذْنِ اللّٰهِ كِتٰبًا مُّؤَجَّلًا ۗ وَمَنْ يُّرِدْ ثَوَابَ الدُّنْيَا نُؤْتِهٖ مِنْهَا ۚ
وَمَنْ يُّرِدْ ثَوَابَ الْاٰخِرَةِ نُؤْتِهٖ مِنْهَا ۗ وَسَنَجْزِي الشّٰكِرِيْنَ ﴿١٤٦﴾
وَكَاَيِّنْ مِّنْ نَّبِيٍّ قٰتَلَ ۙ مَعَهٗ رِبِّيُّوْنَ كَثِيْرٌ ۚ فَمَا وَهَنُوْا لِمَاۤ اَصَابَهُمْ فِيْ
سَبِيْلِ اللّٰهِ وَمَا ضَعُفُوْا وَمَا اسْتَكَانُوْا ۗ وَاللّٰهُ يُحِبُّ الصّٰبِرِيْنَ ﴿١٤٧﴾
وَمَا كَانَ قَوْلَهُمْ اِلَّاۤ اَنْ قَالُوْا رَبَّنَا اغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَاِسْرَافَنَا فِيْۤ اَمْرِنَا
وَثَبِّتْ اَقْدَامَنَا وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ ﴿١٤٨﴾
فَاٰتٰىهُمُ اللّٰهُ ثَوَابَ الدُّنْيَا وَحُسْنَ ثَوَابِ الْاٰخِرَةِ ۗ وَاللّٰهُ يُحِبُّ الْمُحْسِنِيْنَ ﴿١٤٩﴾

**இந்த வசனங்களின் பொருள்:**

*அல்லாஹ்வின் அனுமதியின்றி எந்த உயிரும் மரணமடைவது சாத்தியமானதன்று. (ஏனெனில்) இது குறிப்பிட்ட காலத்தைப் பற்றிய தீர்ப்பாகும். இவ்வுலகக் கூலியை விரும்புவோருக்கு நாம் அதிலிருந்து அவருக்கு வழங்குவோம். மறுமையின் கூலியை விரும்புவோருக்கு நாம் அவருக்கு அதிலிருந்து வழங்குவோம். நன்றி செலுத்துவோருக்கு நிச்சயமாக நாம் நற்பலன் வழங்குவோம்.*

*எத்தனையோ தூதர்கள் (இருந்து) இருக்கிறார்கள். அவர்களுடன் இணைந்து ஏராளமான இறை அடியார்கள் போர் செய்துள்ளனர். இறைவழியில் தங்களுக்கு(த் துன்பம்) ஏற்பட்டதற்காக அவர்கள் தளர்ந்து விடவோ, பலவீனத்தைக் காட்டவோ இல்லை. (எதிரிகளுக்கு முன்னால்) அவர்கள் பணிந்துவிடவும் இல்லை. அல்லாஹ் பொறுமையாளர்களிடம் அன்பு காட்டுகிறான்.*

*எங்கள் இறைவா! எங்கள் (குறைபாடுகளாகிய) குற்றங்களையும், எங்கள் செயல்களில் எங்களின் வரம்பு மீறுதல்களையும் எங்களுக்கு மன்னித்தருள்வாயாக! எங்கள் காலடிகளை உறுதிப்படுத்துவாயாக! மேலும் நிராகரிக்கும் மக்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக! என்று கூறியதைத் தவிர அவர்கள் எதுவும் கூறியதில்லை.*

*எனவே அல்லாஹ் அவர்களுக்கு (இவ்)வுலகின் கூலியையும், மறுமையின் சிறப்புவாய்ந்த கூலியையும் வழங்கினான். அல்லாஹ் நன்மை செய்பவர்களை நேசிக்கின்றான். (3:146-149)*

وَلَا تَحْسَبَنَّ الَّذِيْنَ قُتِلُوْا فِيْ سَبِيْلِ اللّٰهِ اَمْوَاتًا ۭ بَلْ اَحْيَاۗءٌ عِنْدَ رَبِّھِمْ يُرْزَقُوْنَ

فَرِحِيْنَ بِمَآ اٰتٰىھُمُ اللّٰهُ مِنْ فَضْلِهٖ ۙ وَيَسْتَبْشِرُوْنَ بِالَّذِيْنَ لَمْ يَلْحَقُوْا بِهِمْ

مِّنْ خَلْفِهِمْ ۙ اَلَّا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا ھُمْ يَحْزَنُوْنَ

يَسْتَبْشِرُوْنَ بِنِعْمَةٍ مِّنَ اللّٰهِ وَفَضْلٍ ۙ وَّاَنَّ اللّٰهَ لَا يُضِيْعُ اَجْرَ الْمُؤْمِنِيْنَ

*அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டவர்களை, மரணித்தவர்கள் என்று நீங்கள் ஒருபோதும் எண்ண வேண்டாம். மாறாக, அவர்கள் தங்கள் இறைவனிடம் உயிருள்ளவர். (மேலும்) அவர்கள் (ஆன்மீகமாக) உணவளிக்கப்படுகின்றனர்.*

*அல்லாஹ், தனது அருளால் தங்களுக்கு வழங்கியவற்றால் அவர்கள் மகிழ்ச்சி அடைந்தவர்களாவர். மேலும் தங்களுக்குப் பின்னிருந்து (வந்து), தங்களுடன் இதுவரை இணையாதவர்களைப் பற்றி(யும்) மகிழ்ச்சியடைந்தவர்களாவர். (ஏனென்றால்) அவர்களுக்கு எவ்விதமான அச்சமும் ஏற்படாது. அவர்கள் கவலையடைந்தவர்களாய் இருக்க மாட்டார்கள்.*

*(ஆம்) அல்லாஹ்விடமிருந்து (தங்களுக்கு வழங்கப் பெற்று)ள்ள பெரும் அருட்கொடையிலும், (அவனது) அருளிலும், அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களின் கூலியினை வீணாக்குவதில்லை என்பதிலும் அவர்கள் மகிழ்ச்சியடைகின்றனர். (3:170-172)*

அல்லாஹ், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் ஜமாஅத்திற்கு தங்களது உடன்படிக்கையின் ஆன்மாவை புரிந்திருக்கின்ற தியாகங்களின் ஆன்மாவை புரிந்திருக்கின்ற மக்களை வழங்கியிருப்பது அவனது பேரருளும், உபகாரமும் ஆகும். அம்மக்கள் அவற்றின் ஆன்மாவை புரிந்ததுடன் மட்டுமின்றி அவர்கள் எத்தகைய முன்மாதிரிகளை நிலைநாட்டக்கூடியவர்களாக இருக்கின்றனர் என்றால், இக்காலத்தில் அதற்கான உதாரணம் வேறு எங்கும் கிடைக்க முடியாது.

தங்களது பொருளை மார்க்கத்திற்காக செலவு செய்யக்கூடிய மக்கள் எங்கு இருக்கின்றனர் என்ற கேள்வி எழும்போது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நபர்களின் கூட்டம் முன்னால் வந்து நிற்கின்றது. நேரத்தை தியாகம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்படும் போது இன்று அஹ்மதிய்யா ஜமாஅத்தில் மார்க்கத்திற்காக நேரத்தை தியாகம் செய்யக் கூடியவர்கள் இருக்கின்றனர். கண்ணியத்தை தியாகம் செய்கின்ற முன்மாதிரியைப் பார்க்க வேண்டும் என்றால், இன்று அஹ்மதிய்யா ஜமாஅத்தில் அந்த முன்மாதிரியைப் பார்க்கலாம். இஸ்லாத்தை தப்லீக் செய்வதற்காக வாழ்க்கையை அர்ப்பணிக்கும்படி கூறும்போது தூய உள்ளம் கொண்டவர்களின் ஒரு பிரிவினர் ஜமாஅத்தில் இப்பணிக்காக தங்களை அர்ப்பணிக்கின்றனர். உயிரைத் தியாகம் செய்வது தொடர்பான உண்மையான முன்மாதிரியைப் பார்க்க வேண்டும் என்றால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாறு இந்த உண்மையான குர்பானியின் முன்மாதிரிக்கு சாட்சியாகத் திகழ்கின்றது.

சுருக்கமாக, எந்தவொரு தியாகத்தையும் அல்லாஹ் கூறியுள்ள கட்டளைக்கேற்ப இறைவனுக்காக அதை செய்கின்ற முன்மாதிரியை நிலைநாட்டுவதற்காக இன்று அல்லாஹ் அஹ்மதிய்யா ஜமாஅத்தை உருவாக்கியுள்ளான். இன்று அல்லாஹ் ஹஸ்ரத் மஸீத் மவ்ஊது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் எத்தகைய ஜமாஅத்தை வழங்கியுள்ளான் என்றால், அவர்களில் பெரும்பாலார் உயிர், பொருள், நேரம், கண்ணியம் ஆகியவற்றைத் தியாகம் செய்வதற்கான ஆன்மாவை புரிந்து கொள்பவர்களாக இருக்கின்றனர். எல்லா நேரமும் அதற்காக தயாராக இருக்கின்றனர். ஆனால், சிலர் குறைவான அறிவின் காரணமாக சில விஷயங்களை வெளிப்படுத்திக் கூறுகின்றனர். அது ஒரு நம்பிக்கையாளரின் மகிமை ஆகாது அல்லது நிலைமைகளின் காரணமாக மனித எதிர்பார்ப்புகளுக்கேற்ப அவர்கள் சிலவற்றை வெளிப்படுத்திக் கூறும் போது குறைவான தர்பிய்யத் பெற்றவர்கள்; குறைமதியுடையவர்கள் அதிகமாக அதிலிருந்து தீய தாக்கத்திற்கு ஆளாகி விடுகின்றனர். சோதனை மற்றும் பரீட்சையின் காலக்கட்டம் நீளமானதாக ஆகிக் கொண்டிருக்கின்றது என்று சிலர் எனக்கு எழுதவும் செய்கின்றனர். துன்பங்கள் மற்றும் சோதனையின் காலக்கட்டம் மிக நீளமானதாக ஆகி விட்டது. அல்லாஹ் விரைவில் எளிதான நிலைமை ஏற்படுவதற்கான வழிவகையைச் செய்வானாக என்று அவர்கள் தமது நிலையை வெளிப்படுத்துகின்றனர் என்றால், இதில் எந்தத் தவறும் இல்லை. ஏனென்றால், அளவு கடந்த கடினமான நிலை மற்றும் சோதனை ஏற்படும் போது தூதரும் நம்பிக்கையாளர்களின் ஜமாஅத்தும் 'அல்லாஹ்வின் உதவி எப்போது வரும்?' என்று குரல் எழுப்புகின்றனர். துஆவும் செய்கின்றனர். ஆனால் அவ்வாறு தமது நிலையை வெளிப்படுத்தும்போது உலகத் தொடர்புகள், காரணிகள்

ஆகியவற்றின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும் என்ற தமது விருப்பங்களை அவர்கள் தெரிவிக்கும் போது இது ஒரு நம்பிக்கையாளரின் மகிமை ஆகாது.

உதாரணமாக, ஒருவர் எழுதுகின்றார்: பாகிஸ்தானில் என்ன அநீதிகள் நடக்கின்றதோ அதைப் பற்றி நாம் உலகிற்கு தெரிவிக்க வேண்டும். மேலும் M.T.A –விலும் பெரும் பகுதி இந்த அநீதிகள் பற்றி உலகிற்கு எடுத்துக் கூறும் வகையிலுள்ள நிகழ்ச்சிகள் இருக்க வேண்டும். மற்ற வழிகளையும் இதற்காக பயன்படுத்த வேண்டும். அநீதிக்கு எதிராக உலகில் குரல் எழுப்ப வேண்டும் என்று எழுதியுள்ளார். அவரது கடிதத்திலிருந்து தெரிய வருவது உலகவாதிகள் செய்வது போன்று கூச்சலிட்டு உலகிற்கு முன்னால் தமது கண்டன முழக்கங்களை முழங்குவது ஆகியவற்றைச் செய்தால்தான் நமக்கு எதிராக இருக்கின்ற அரசாங்கங்களுக்கு நமது உரிமைகளைத் தருவதன் பக்கம் கவனம் ஏற்படும். இதன் மூலம் இந்த துன்பங்கள் மற்றும் சோதனைகளின் காலக்கட்டம் முடிவிற்கு வரும் என்று அவர் கருதுகின்றனர்.

அவர் எழுதுகின்றார். எனது ஷியா நண்பர் ஒருவர் என்னிடம் கூறினார்: அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் இவர்கள் எப்படியெல்லாம் நடந்து கொள்கின்றார்களோ அவ்வாறு எங்களுடன் நடந்து கொண்டிருந்தால் நாங்கள் அதற்கு இவ்வாறு கண்டனம் தெரிவித்திருப்போம்; ஊர்வலம் நடத்தி இருப்போம்; இதை செய்திருப்போம்; அதை செய்திருப்போம். இவ்வாறு சிறிதளவு எங்கள் மீது அநீதியிழைக்கப்பட்டிருந்தால் கூட நாங்கள் உலகில் கூச்சல் போட்டிருப்போம். அஹ்மதிகள் சரியான முறையில் கண்டனம் தெரிவிக்கவில்லை. இவர்கள் மீது அநீதியிழைக்கப்படுவது மற்றும் சோதனையின் காலக்கட்டம் இதன் காரணமாகத்தான் நீளமாகிக் கொண்டிருக்கின்றது என்று அந்த நண்பர் கூறியதாக எழுதியுள்ளார்.

இது தொடர்பாக நினைவில் வைக்க வேண்டிய முதல் விஷயம் நாம் ஒரு இறைவனின் இயக்கத்தைச் சார்ந்திருப்பவர்கள் என்பது நமது வாதமாகும். இறை இயக்கங்கள் உலக அரசாங்கங்கள் மற்றும் உலக வழிமுறைக்கேற்ப செய்யப்படும் கண்டனங்கள் ஆகியவற்றில் நம்பிக்கை வைப்பதில்லை. இறை இயக்கங்களின் முன்னேற்றத்தில் உலக உதவியின் கையோ அல்லது ஆதரவோ இருப்பதில்லை; நிபந்தனையின்றி உலக உதவிகள் கிடைக்காது. எந்த நோக்கமுமின்றி அவை செய்யப்படுவதில்லை. தனக்கு முன்னால் ஏதாவதொரு வகையில் நம்மை தலை குனிய வைக்காமல் அவை கிடைக்காது. உலகின் பக்கம் மட்டுமே நமது பார்வை இருக்கும் என்றால், இத்தகைய நிலைதான் உருவாகும். இந்த விஷயங்களை ஓர் உண்மையான நம்பிக்கையாளரால் சகித்துக் கொள்ள முடியாது. நம்பிக்கையாளர்கள் தரப்பிலிருந்தும் 'அல்லாஹ்வின் உதவி எப்போது வரும்?' என்று குரல் எழுப்பப்படுகின்றது என்றால் இது இறைவன் முன்னால் குனிந்தவாறு செய்யப்படும் துஆவின் குரலாகும். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் சோதனை மற்றும் பரீட்சையின் காலக்கட்டத்தைக் கடந்து சென்றவாறு அல்லாஹ்வின் முன்பு குனிந்தவாறு அவனது அருளையும் உதவியையும் வேண்டும் போது முன்னேற்றத்தின் புதிய புதிய வழிகள் நமக்கு முன்னால் திறந்து கொண்டே இருக்கின்றது. இன்று ஏறக்குறைய முழு உலகிலும் பரவியுள்ள ஜமாஅத் சகோதரர்கள் மற்றும் உலகின் **204** நாடுகளில் வசிக்கின்ற அஹ்மதிகள் அனைவரும் இந்த சோதனை ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான புதிய புதிய வழிகளைத் திறந்து தருகின்றது என்பதற்கும் புதிய புதிய இலக்குகளை நாம் கடந்து செல்கின்றோம் என்பதற்கும் சாட்சிகளாக உள்ளனர். ஒரு நாட்டில் சோதனை அல்லது பரீட்சையின் காலக்கட்டம் நீண்டு விட்டது என்ற விஷயத்தால் மட்டும் நாம் கவலை அடைந்து விடக் கூடாது. மாறாக அல்லாஹ்வின் அருள்களின் விரிவான நிலை எங்கு வரை பரவியுள்ளது என்பதைப் பார்க்க வேண்டும். உலகக் காரணிகளையும் பயன்படுத்த வேண்டும் என்பதைப் பொருத்தவரையில் அது சரிதான். அவ்வாறு நடக்க வேண்டும். காரணிகளைப் பயன்படுத்துவது தடை செய்யப்படவில்லை. மாறாக, இதைப் பற்றியும் கட்டளையிடப்பட்டிருக்கின்றது. வெளிப்படையான வழிமுறைகளை மேற்கொள்வது தடை செய்யப்பட்டதல்ல. அல்லாஹ்வின் அருளால் எந்த வரம்புகளுக்குள் இருந்தவாறு நாம் இந்த வெளிப்படையான காரணிகளைப் பயன்படுத்த முடியுமோ அவ்வாறு அவற்றை பயன்படுத்த வேண்டும். அவ்வாறு நாம் செய்யவும் செய்கின்றோம். ஜமாஅத்தின் மீது எவ்வாறு அநீதிகள் இழைக்கப்படுகின்றன என்பதை நாம் உலகிற்கு தெரிவிக்கவும் செய்கின்றோம். நாம் அவர்களுக்கு இதை கூறுகின்றோம். இன்று முழு உலகமும் ஒன்றுசேர்ந்து இந்த அநீதிகளை முடிவுக்கு கொண்டு வர முயற்சி செய்யாமல் இருந்தால் இந்த அநீதியிழைத்தல் பரவிக் கொண்டே செல்லும். ஜமாஅத் பற்றிய கேள்வி மட்டும் எழாது. மாறாக, எந்தவொரு மனிதனும் பாதுகாப்பாக இருக்க முடியாது. இந்த அநீதிகள் இப்போது பரவுகின்றது. உலகம் இதைப் பார்க்கின்றது. இவற்றையெல்லாம் கூறிய பிறகும் கூட நாம் எந்தவொரு அரசையும் சார்ந்திருக்கவில்லை. எந்தவொரு மனித உரிமைகளைப் பெற்றுத் தருகின்ற அமைப்பையும் சார்ந்திருக்கவில்லை. மாறாக நாம் இறைவனையே சார்ந்திருக்கின்றோம். இந்தக் கருத்தைத்தான் குறிப்பாக கடந்த ஒன்றிரண்டு குத்பாக்களில் நான் கூறி வருகின்றேன். எல்லா விளைவுகளையும் பெறுவதற்கு நமது

பார்வை இறைவன் பக்கம் இருக்க வேண்டும். இதுவே ஒரு நம்பிக்கையாளரின் மகிமையாகும். உலகவாதிகள் கூச்சலிடுகின்றனர். மாநாடுகளையும் ஊர்வலங்களையும் நடத்துகின்றனர். பொருட்களை உடைக்கின்றனர். தங்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு அதைப் போன்ற கொடுமைகளை இழைத்து பழிவாங்குகின்றனர். இது ஏன் என்றால் அவர்களுடன் இறுதி வெற்றி உங்களுடையது தான் என்ற இறை வாக்குறுதிகள் இல்லை. ஆனால், நம்முடன் இறைவனின் வாக்குறுதிகள் இருக்கின்றன. உங்களுக்கு இத்தகைய அநீதிகள் இழைக்கப்பட்ட பிறகும் கூட, அரசாங்கத்தின் தரப்பிலிருந்தும் அல்லது அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடன் அரசுப் பணியில் இருப்பவர்கள் மற்றும் அதிகாரிகள் தரப்பிலிருந்தும் கொடுமைகள் இழைக்கப்பட்ட பிறகும் கூட அல்லாஹ்வின் விதியின்படி உங்களுக்கு அந்த அருட்கொடைகள் கிடைக்க வேண்டியதுள்ளது. அல்லாஹ்வின் குறிப்பான அருளால் நம்பிக்கையாளர்களுக்கு கிடைக்கின்ற அந்த அருட்கொடைகள் உங்களுக்கு கிடைக்கும் இன்ஷா அல்லாஹ். இந்த உலகின் அருட்கொடைகளுக்கும் நீங்கள் வாரிசாவீர்கள். மறுவுலக அருட்கொடைகளுக்கும் நீங்கள் வாரிசாவீர்கள். தியாகங்களின் எந்த நல்லுதாரணங்களை நீங்கள் நிலைநாட்டுகின்றீர்களோ அவை ஒருபோதும் வீணாகாது. இறுதி வெற்றி உங்களுடையது தான். இந்த வெற்றியைப் பெறுவதற்கு எல்லாவற்றையும் விட மிகச் சிறந்த மருந்து துஆக்களாகும். எந்த அளவு அதிகமாக துஆக்களில் மூழ்குவீர்களோ அந்த அளவு விரைவாக துன்பங்கள் அகன்று விடும். எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து தப்பிப்பதற்கு எந்த அளவு உங்கள் அன்பான இறைவனுடன் நீங்கள் ஒன்றிவிடுவீர்களோ அந்த அளவு விரைவாக அவன் வெளிப்பட்டு அசாதாரணமான அடையாளங்களைக் காட்டுவான் இன்ஷா அல்லாஹ்.

எனவே, நமது எண்ணத்திற்கும் உலகவாதிகளின் எண்ணத்திற்கும் மிகப்பெரும் வித்தியாசம் இருக்கின்றது. நாம் காலத்தின் இமாமிடம் பைஅத் செய்துள்ளோம். அவர்களுடன் இறைவனின் வெற்றிகள் பற்றிய வாக்குறுதிகள் உள்ளன. வெற்றிகளின் புதிய புதிய கதவுகள் திறக்கப் போகின்றது. நான் ஏற்கனவே கூறியது போன்று இந்த சாட்சிகளை நாம் பார்க்கவும் செய்கின்றோம். மற்றவர்களுன் இதுபோன்ற எந்த வாக்குறுதியும் இல்லை. ஷியாக்களின் உதாரணம் அல்லது மற்றவர்களின் உதாரணத்தை இவர்கள் தருவதைப் பொருத்தவரை உலகக் கண்டனங்கள் மூலம் அவர்கள் தங்கள் நோக்கங்களில் வெற்றி பெற்றிருப்பதாக எங்குமே என்னால் பார்க்க முடியவில்லை. மாறாக பொருட்களை உடைப்பது, முற்றுகையிடுவது, எரிப்பது போன்ற செயல்கள் எல்லா இடங்களிலும் நடக்கின்றது. அநீதிக்குப் பதில் அநீதியிழைத்தலை தவிர வேறெதுவும் இல்லாமல் ஆகிவிட்டது. நாம் இதை செய்யக் கூடாது. இங்கு நான் உலகவாதிகள் நடந்து கொள்கின்ற விதத்திற்கு ஓர் உதாரணமும் கூறி விடுகின்றேன். நான் ஏற்கனவே கூறியது போன்று உலகம் நமக்கு உதவி செய்தாலும் கூட அதன் மூலம் தனக்கு கிடைக்கும் தமது சுய பலன்களைப் பார்த்துதான் அவ்வாறு செய்கின்றது.

கடந்த சில நாட்களுக்கு முன் இங்குள்ள பத்திரிகை ஒரு செய்தி வெளியிட்டிருந்தது. அதில் இங்குள்ள முஸ்லிம்கள் அரசாங்கத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் அல்ல. எனவே மேற்கத்திய நாடுகளிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றிட வேண்டும் என்று அதில் எழுதப்பட்டிருந்தது. இதைப் பார்த்த பிறகு நமது அச்சகப் பிரிவு தரப்பிலிருந்தும் இது தவறாகும். இஸ்லாம், நாட்டின் சட்டத்தைப் பேண வேண்டும் மற்றும் நாட்டின் மீது பற்று இருக்க வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கின்றது என்று கூறப்பட்டது. இதற்கு அந்த பத்திரிகை மற்ற முஸ்லிம் பிரிவுகள் இதற்கேற்ப செயல்படுவதில்லை. நீங்களும் மற்ற பிரிவுகளுக்குப் போதனை செய்யுங்கள் என்று கூறியது. நல்லது! உங்கள் பத்திரிகை இந்தப் போதனையை வெளியிடத் தயாராக இருக்கின்றது என்றால் நாங்கள் எங்கள் கருத்தை எழுதித் தருகின்றோம் என்று நாம் கூறினோம். அவர்கள் இதை எழுத வேண்டும்; அதை எழுத வேண்டும் என்ற கூறிய நிபந்தனைகளுக்கேற்ப அவ்வாறே எழுதிக் கொடுத்த பிறகும் கூட பிறகு பத்திரிகையின் ஆசிரியர் அல்லது அவரது போர்டு இந்த அறிவிப்பை வெளியிட மறுத்து விட்டது. இதுபோன்ற வேறு சில கட்டுரைகள் வந்து விட்டதால் இந்தக் கட்டுரையை வெளியிட முடியவில்லை என்று சாக்குப்போக்கு கூறினர். பிறகு எப்போதாவது பார்க்கலாம் என்று கூறி நழுவி விட்டனர். எவ்வாறிருப்பினும் இவை அவர்களின் சாக்குப்போக்குகள் ஆகும். உண்மையில் அவர்களுக்கு அஹ்மதிகளுக்கு எதிராக உள்ள மற்ற முஸ்லிம் பிரிவுகள் வெறுப்படைந்து விடக்கூடாது என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கின்றது. அவர்களிடம் தைரியம் இல்லை. நீதியின் எதிர்பார்ப்புகளை அவர்கள் நிறைவேற்ற விரும்பவில்லை. சில வகையிலுள்ள அச்சமும் பயமும் அவர்களுக்குள் இருக்கின்றது. சில முஸ்லிம்கள் கடினமாக நடந்து கொள்வதை அவர்கள் பார்க்கும் போது அவர்களுக்கு இந்த அச்சம் இன்னும் அதிமாகி விடுகின்றது. பெரும்பாலும் நான் பல்வேறு தலைவர்களிடமும் பத்திரிகையாளர்களிடமும் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்றால், முதலில் நீதியை நிலைநாட்ட வேண்டும்; இரட்டை வேடம் போடக்கூடாது என்று நான் கூறும்போது இந்த விஷயத்தில் எங்களிடம் குறை இருக்கின்றது. உண்மை இதுதான் என்று அவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

சிலர் எந்த அளவு திறந்து இதனை கூறுகின்றனர் என்றால், எங்கள் சுய நோக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்காக நாங்கள் அஜெண்டா உருவாக்கியுள்ளோம் என்று வெளிப்படையாக எங்களால் கூற முடியாது. ஆனால் உண்மை என்னவென்றால், நாங்கள் உலகிற்கு முன்னால் நீதியை பற்றிய விஷயங்களைப் பேசுகின்றோம். ஆனால் அதில் நோக்கம் எங்களுடையதாக இருக்கின்றது. அதைதான் நாங்கள் பெற வேண்டும் என்கின்றனர். எவர்களின் பக்கம் நாம் நமது பார்வையை வைக்க வேண்டும் என்று நாம் கூறுகின்றோமோ அல்லது நம்மில் சில மக்களது எண்ணம் இவ்வாறு இருக்கின்றதோ அவர்களின் நிலை இதுதான். இரட்டை வேடம் போடக்கூடியவர்களைச் சார்ந்து நாம் இருக்க வேண்டும். துன்பங்களை அகற்றுவதற்கு இவர்களிடம் எந்த ஆற்றலும் இல்லை. ஒரு பத்திரிகை இருக்கின்றது. அது நாட்டின் மீது நமது அன்பை வெளிப்படுத்தும் வகையிலுள்ள நமது ஓர் அறிக்கையைக் கூட வெளியிட விரும்பவில்லை. பாதுகாப்பைக் கருதி செய்தி வெளியிடாமல் இருப்பதற்கு, அது சண்டை சச்சரவுகளுடன் தொடர்புடைய செய்தி அல்ல. எனவே இத்தகைய ஆலோசனைகளை வழங்கக்கூடியவர்கள் நாம் எவ்வாறு இந்த மக்களின் பக்கம் பார்க்க முடியும்; இவர்கள் மீது நம்பிக்கை வைக்க முடியும் என்பதை சிந்திக்க வேண்டும்.

ஒவ்வொரு அஹ்மதியும் இறைவனை சார்ந்திருப்பதன் உண்மையைப் புரிந்து அதற்கேற்ப செயல்பட ஆரம்பித்தால் எங்கெல்லாம் அஹ்மதிகள் மீது அடக்குமுறைகள் இருக்கின்றதோ அவை துஆக்கள் மூலமாக காற்றில் பறந்து விடும் இன்ஷா அல்லாஹ். ஆனால் இந்த துஆக்களுக்குரிய உரிமையைச் செலுத்த வேண்டும் என்பதே நிபந்தனையாகும். பாகிஸ்தானிலும் மற்ற சில நாடுகளிலும் அஹ்மதி அல்லாதவர்கள் தரப்பிலிருந்தும் அரசாங்கத்தின் தரப்பிலிருந்தும் ஜமாஅத் மீது கடுமை காட்டப்படுகின்றதென்றால், சட்டத்தின் போர்வையில் அல்லது வேறு ஏதாவதொரு வகையில் அநீதியிழைக்கப்படுகின்றது என்றால், இது இன்று உருவான நிலை அல்ல. இது கடந்த ஒரு சில வருடங்கள் வரை தொடர்ந்து நடைபெற்று வரும் விஷயங்கள் அல்ல. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தானே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று வாதம் செய்து ஒரு ஜமாஅத்தை நிறுவிய நாளிலிருந்தே இருந்து வருகின்ற நிலையாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும் அவர்களது ஜமாஅத்திற்கும் ஆரம்ப நாட்களிலிருந்தே இந்த கடினமான நிலைமையும் அநீதிகளையும் கடந்து செல்ல வேண்டியது வந்தது. இன்னும் சொல்வதென்றால், ஒருமுறை இப்படிப்பட்ட சந்தர்ப்பமும் வந்தது. அப்போது தமது மூதாதையர்களின் ஊரான காதியானிலிருந்தும் ஹிஜ்ரத் செய்ய வேண்டியது வரும் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் குடும்பம் தான் தொன்று தொட்டு இந்த ஊரின் எஜமானர்களாக இருந்திருக்கின்றனர். அவர்களுக்கு அங்கும் பாதுகாப்பு இருக்கவில்லை. நாம் இன்னும் மேலே செல்வதாக இருந்தால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கையின் முழு காலகட்டமும் எதிரிகள் தரப்பிலிருந்தும் இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டவாறுதான் கடந்தது. இலட்சக்கணக்கான ரூபாய்களுக்கு எஜமானியாக இருந்த பெருமானார் (ஸல்) அவர்களது பிரியமான மனைவிக்கு எண்ணற்ற அடிமைகள் இருந்தனர். மக்காவிலுள்ள பெரும் செல்வந்தர்களில் ஒருவராக அவர்கள் இருந்தார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு எத்தகைய கடினமான நிலைமைகளை அவர்கள் கடந்து செல்ல வேண்டியது வந்தது? முதுமையில் அவர்கள் தமது வீட்டை விட்டும் வெளியேற்றப்பட்டார்கள். மிக நீண்ட காலம் வரை மிகவும் ஆதரவற்றை நிலையில் ஒரு பள்ளத்தாக்கில் இருக்க வேண்டியது வந்தது. அங்கு உணவிற்கும், தண்ணீருக்கும் தட்டுப்பாடு இருந்தது. தங்குமிடம் இல்லாமல் இருந்தது. இத்தகைய கடினமான நிலைமையும் துன்பமும்தான் அவர்கள் வஃபாத் ஆவதற்குக் காரணமாக இருந்தது. இவற்றையெல்லாம் இஸ்லாத்திற்காகவும் ஒரு நல்ல நோக்கத்திற்காகவும் அவர்கள் சகித்துக் கொண்டார்கள். இந்த தியாகங்களுக்குப் பின்னால் இறைவனின் உதவி பற்றிய வாக்குறுதி இருக்கின்றது. அவை நிறைவேறும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கே எத்தகு துன்பங்கள் வந்தன. மக்காவில் தொடர்ச்சியாக 13 மாதங்கள் வரை அவர்கள் மீது கொடுமைகள் இழைக்கப்ட்டது. அவர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு அம்புகள், பிரம்புகள், கற்கள் போன்ற எந்தப் பொருட்கள் தான் இல்லாமல் இருந்தது? அவற்றின் மூலம் அவர்களுக்கு துன்பம் இழைக்க முயற்சி செய்யப்பட்டது. ஆனால் அவர்கள் அவற்றை வீரத்துடன் எதிர்த்ததுடன் மட்டுமின்றி தங்களுக்குப் பிரியமானவர்கள் நெருக்கமானவர்கள் சஹாபாக்கள் ஆகியோரின் உயிர் தியாகத்தையும் சகித்துக் கொண்டார்கள். இந்தக் கொடுமைகளின் காரணமாக பெருமானார் (ஸல்) அவர்களிடம் எதிரிகளுக்காக தீய துஆ செய்யும்படி வேண்டப்பட்ட போது அவர்கள் அந்த எதிரிகளுக்கு ஹிதாயத் அதாவது நேர்வழி கிடைக்கவே துஆ செய்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மீது கல்லெறியப்பட்டு அவர்கள் உடலிலிருந்து இரத்தம் வழிந்தோடியது. அந்த நாளே தனது வாழ்நாளின் மிகக் கடினமான நாள் என்று அவர்களே கூறியுள்ளார்கள். அப்போது அல்லாஹ் அந்த மக்களை அழிப்பதற்காக பெருமானார் (ஸல்) அவர்களிடம் அது குறித்து அவர்களது விருப்பம் என்ன? என்று கேட்ட போது, இல்லை; மலையை இவர்கள் மீது விழும்படி செய்யக்கூடாது. இவர்களிலிருந்து ஒருவேளை உண்மையை ஏற்றுக் கொள்பவர்கள் தோன்றலாம். அப்படிப்பட்ட மக்கள் உருவாகுவர் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

இவ்வாறு உண்மையை ஏற்றுக் கொண்டு தங்களது உலகையும், மறுமையையும் சரிசெய்பவர்களாக அவர்கள் ஆகிவிட வேண்டும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹிஜ்ரத்திற்குப் பிறகு தொடர்ந்து பல போர்கள் நடந்தன. மீண்டும் மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டது. எங்கு அநீதியிழைத்தலின் ஒரு நீண்ட வரலாறு இருக்கின்றதோ அங்கு பொறுமை, சகிப்புத்தன்மை, கருணை ஆகியவற்றின் ஈடிணையற்ற நீண்ட வரலாறு அவர்கள் மூலமாக எழுதப்பட்டிருக்கின்றது. இவை அனைத்தையும் பெருமனார் (ஸல்) அவர்கள் சகித்துக் கொள்ள வேண்டியது தான் வந்தது. ஏனென்றால், ஒவ்வொரு விவகாரத்திலும் உலகில் அவர்கள் ஒரு முன்மாதிரியை நிலைநாட்ட வேண்டியதிருந்தது. பெருமானார் (ஸல்) அவர்களது சஹாபாக்களும் தியாகத்தின் முன்மாதிரியைக் காட்டினார். ஏனென்றால், இறைவனின் வாக்குறுதிகள் மற்றும் அல்லாஹ் வழங்கியுள்ள போதனைகளின் பக்கம் அவர்களின் பார்வை இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நிழலாகத் தோன்றியுள்ளார்கள். எனவே, அவர்களும் தங்களை ஏற்றுக் கொண்டவர்களிடம் இதைத்தான் கூறியுள்ளார்கள். அதாவது என்னுடைய ஜமாஅத்தின் மீது துன்பங்களும் கொடுமைகளும் இழைக்கப்படுகின்ற காலம் வரவிருக்கிறது.

அவர்கள் தெளிவாகக் கூறினார்கள்: எனது வழி மலர்களால் நிறைந்தது அல்ல. மாறாக முட்களில் நடக்க வேண்டியது வரும். எவரையும் அவர்கள் ஏமாற்றவில்லை. அஹ்மதிய்யத்தில் நுழைகின்ற ஒவ்வொரு நபரும் துன்பங்களைச் சகிக்க வேண்டியது வரும் என்பதை புரிந்தே நுழைகின்றனர். நான் சில வேளைகளில் புதிதாக பைஅத் செய்தவர்களிடம் அஹ்மதிய்யத்தின் வழி மலர்களால் அலங்கரிக்கப்பட்டதல்ல என்பதைப் பற்றிய கணிப்பு அவர்களிடம் இருக்கின்றதா என்று பார்ப்பதற்காக அவர்களிடம் கேள்வி கேட்டேன். கடந்த சில நாட்களுக்கு முன் U.K. –வில் புதிதாக பைஅத் செய்தவர்களுடன் ஓர் அமர்வு இருந்தது. அப்போது ஒரு நண்பரிடம் நான் இந்தக் கேள்வியைத்தான் கேட்டேன். ஏனென்றால், அவருக்கு பாகிஸ்தானுடன் தொடர்பிருந்தது. அப்போது அவர் இந்த பதிலைத்தான் கூறினார். நாங்கள் சிந்தித்த பிறகே பைஅத் செய்துள்ளோம். இந்த வழியில் ஒவ்வொரு கடினத்தையும் சகித்துக் கொள்ள நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்றார்கள். சில பெண்கள் கூட தங்களது வீடுகளை விட்டு விட்டனர். ஆனால் ஈமானை கைவிட்டு விடவில்லை. இன்று, எல்லாம், அவர்கள் உலகை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவதற்கான அறிவைப் பெற்றதால் ஏற்பட்டதாகும். வாழ்வும் மரணமும் இறைவனின் கையில் இருக்கின்றது என்ற அறிவை அவர்கள் பெற்றிருந்தனர். அல்லாஹ்வுக்காக கொள்கையில் உறுதியாக நிலைத்து நிற்பவர்கள் நற்பேறு பெற்றவர்களாவர். அல்லாஹ் அவர்களை ஈருலக சொர்க்கத்திற்கு வாரிசாக்குகின்றான். இவை நாவால் கூறப்படும் விஷயங்கள் மட்டுமல்ல. மாறாக, அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றில் இப்போது இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏதாவதொரு வடிவத்தில் தென்பட்டுக் கொண்டே இருக்கின்றது. தியாகத்தின் இந்த முன்மாதிரிகள் காட்டப்படும் போது எத்தகைய தியாகங்களின் முன்மாதிரிகள் உள்ளன என்பதைப் பார்த்து மனிதன் வியப்பில் ஆழ்ந்து விடுகின்றான். இவை எல்லாம் ஏன் நடக்கின்றன என்றால் நான் ஏற்கனவே கூறியது போன்றே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஆரம்ப நாட்களிலிருந்தே இவ்வாறு நடக்கும் என்று நமக்கு தெளிவாகக் கூறியிருந்தார்கள். மேலும் இவற்றையெல்லாம் பார்த்து அவை உங்களது வாழ்வில் நடந்த பிறகும் கூட நீங்கள் உங்களது ஈமானில் எந்தக் களங்கமும் ஏற்பட விட்டுவிடக் கூடாது. இந்த உறுதியாக நிலைநிற்றலின் காரணமாக அல்லாஹ் உங்களுக்காக ஈருலகிலும் அருட்கொடைகளை நிர்ணயம் செய்துள்ளான் என்ற விஷயத்தை நீங்கள் நினைவில் வைக்க வேண்டும். இதைப் பற்றி அல்லாஹ் திருக்குர்ஆனிலும் பல இடங்களில் கூறியுள்ளான். நான் ஓதிய வசனங்களின் பொருளையும் நீங்கள் கேட்டுள்ளீர்கள். இவற்றிலும் இந்த கருத்து தான் கூறப்பட்டுள்ளது. வாழ்வும், மரணமும் ஒவ்வொருவருடனும் சேர்ந்து இருக்கின்றது. அல்லாஹ் இங்கு தெளிவுபடுத்தி விட்டான். வாழ்வும், மரணமும் இறைவனின் கட்டளையின்படி ஏற்படுகின்றது. எதிரிகள் அதிகபட்சமாக நமக்கு மரணத்தைப் பற்றி அச்சுறுத்தலாம். அதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டாம். அந்த மரணம் இறை வழியில் வந்தால் பிறகு அருட்கொடைகள் தொடர்பான நற்செய்திகள் இருக்கின்றது. வரலாற்றில் பார்க்கின்றோம். ஹஸ்ரத் காலித் பின் வலீத் மரணப் படுக்கையில் இருந்த சமயத்தில் ஒரு நண்பர் அவரை உடல்நலம் விசாரிப்பதற்காக வந்திருந்தார். அவரைப் பார்த்து அவர்கள் மிகுதியாக அழ ஆரம்பித்தார்கள். அப்போது அவருக்கு ஒருவேளை மரணம் பற்றிய பயம் ஏற்பட்டிருக்கலாம் என்று அவரது நண்பர் நினைத்தார். அவர்கள் காலிதே! நீங்கள் எதிரிகளின் பிடியில் பலமுறை வந்துள்ளீர்கள். எத்தகு வீரத்தை வெளிப்படுத்தியுள்ளீர்கள் என்றால் மனிதன் அதைப் பார்த்து வியப்பில் ஆழ்ந்து விடுகின்றான். இப்போது இந்த சமயத்தில் நீங்கள் ஏன் மரணத்திற்காகப் பயப்படுகின்றீர்கள் என்று கேட்டார். ஹஸ்ரத் காலித் கூறினார்கள். என் மீதுள்ள ஆடையை அகற்றுங்கள். அப்போது அவர்களது உடலில் மேற்பகுதியில் ஒவ்வொரு அங்குலத்திலும் காயத்தின் அடையாளம் இருப்பதைப் பார்க்க முடிந்தது. பிறகு காலித், எனது கால்கள் மீதுள்ள ஆடையை அகற்றுங்கள் என்றார். அங்கும் ஒவ்வொரு அங்கிலத்திலும் காயத்தின் அடையாளம் இருந்தது.

***பிறகு ஹஸ்ரத் காலித் பின் வலீத் அவர்கள் கூறினார்கள்:***

நான் மரணத்தின் அச்சத்தால் அழவில்லை. இந்த கவலையினால் நான் அழுகின்றேன். அதாவது நான் எப்போதும் ஷஹாதத்திற்காக ஆசைப்பட்டேன். இந்தக் காயத்தின் அடையாளங்கள் இதற்கு சாட்சியாக இருக்கின்றது. ஆனால் எனக்கு அந்த உயர் தகுதி கிடைக்கவில்லை. இப்போது நான் படுக்கையில் என் உயிர் பிரியப் போகின்றது. ஷஹாதத் மூலமாக மரணம் எனக்கு வராமல் இருந்தது. ஒருவேளை எனது செயல்களின் விளைவால் இருக்குமோ? என்று நான் அஞ்சுகின்றேன். எனக்கு இறைவன் ஷஹாதத்தை வழங்காமல் இருந்து அவன் என் மீது வெறுப்படைந்து விட்டதால் தானா? என்ற அச்சம் எனக்கு இருக்கின்றது. அல்லாஹ்வின் வழியில் செய்யப்படும் தியாகத்தின் ஆன்மாவை புரிந்தவர்களின் உயர் தகுதி இப்படிப்பட்டதாகும். இது அவர்களது உள்ளத்தின் நிலையாகும். ஆனால் அல்லாஹ் அத்தகைய வெற்றி வீரர்கள் தொடர்பாக அவர்களுக்கும் சுவர்க்கத்தைப் பற்றிய நற்செய்தியை வழங்குகின்றான். நான் இதைக் கூறியதன் நோக்கம் ஷஹாதத்திற்காக அவர்களிடம் இத்தகைய உணர்வு இருந்தது. பிறகு தியாகத்தின் உணர்வைப் புரிந்து கொள்வதற்கு இந்த காலத்திலும் உதாரணம் இருக்கின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் ஹஸ்ரத் சாஹிப் ஸாதா அப்துல் லத்தீப் ஷஹீது அவர்களிடம் அரசர் மீண்டும் மீண்டும் பிடிவாதமாக நீங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது ஈமான் கொள்ளவில்லை என்று மறுத்துக் கூறி விட்டால் உங்களது உயிர் தப்பிப்பதற்கான ஏற்பாட்டை நான் செய்வேன் என்று கூறினார். இவ்வாறு பேராசை ஊட்டப்பட்டது. ஆனால், அவர்கள் ஒவ்வொரு முறையும் இதைத்தான் கூறினார்கள். அதாவது இன்று இறைவன் எனக்கு அவனது அருட்கொடைகளுக்கு வாரிசாகின்ற அந்த மரணத்தைத் தருகின்றான் என்றால், நான் உலகிற்காக இதை ஏன் மறுக்க வேண்டும்? அறிவிலி கேட்கின்ற கேள்வியை நீ என்னிடம் கேட்கின்றாய் அல்லது அறிவில்லாமல் என்னுடன் நீ இவ்வாறு பேரம் பேசுகின்றாய். இதுவே ஒரு நம்பிக்கையாளரின் மகிமையாகும்.

***இது தொடர்பாக அல்லாஹ் இந்த வசனங்களில் கூறியுள்ளான்:***

*இறைவழியில் தங்களுக்குத் துன்பம் ஏற்பட்டதற்காக அவர்கள் தளர்ந்து விடவோ, பலவீனத்தைக் காட்டவோ இல்லை. எதிரிகளுக்கு முன்னால் அவர்கள் பணிந்து விடவும் இல்லை. அல்லாஹ் பொறுமையாளர்களை நேசிக்கின்றான்.*

இன்றும் கூட நமது எதிரிகளுக்கு இந்த துன்பம் தான் இருக்கின்றது. அது இவர்கள் ஏன் பலவீனத்தைக் காட்டவில்லை? நமது அநீதியிழைத்தல் மூலமாக இவர்கள் ஏன் நமக்கு முன்னால் தலை குனிவதில்லை? என்ற துன்பமாகும். ஆனால் ஓர் உண்மையான அஹ்மதி எல்லா சமயத்திலும் இறைவன் மீது தனது பார்வையை வைத்துள்ளான் என்பது இவர்களுக்குத் தெரியாது. அல்லாஹ்விடமிருந்து நற்கூலியைப் பெறுவதற்கு எப்போதும் அவர் முயற்சி செய்து வருகின்றார். அல்லாஹ் தனது திருப்தியைப் பெற்றுக் கொள்வதற்காக இங்கு ஒரு துஆவையும் கற்றுத் தந்துள்ளான். தமது காலடிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக எப்போதும் துஆ செய்து வர வேண்டும் என்று கூறுகின்றான். ஏனென்றால், ஈமானில் வலிமை இறைவன் புறமிருந்து தான் வருகின்றது. இந்த உலகம் உங்களது ஈமானை பலவீனப்படுத்துவதற்கு வலுவாக செயல்படுகின்றது. இதன் தாக்கத்தின் கீழ் வந்து விட வேண்டாம். பிறகு இந்த துஆவை இறைவன் கற்றுத் தந்துள்ளான். அந்த வசனங்களை நான் ஓதி இருந்தேன்.

رَبَّنَا اغْفِرْلَنَا ذُنُوْبَنَا وَ اِسْرَافَنَا فِیْٓ اَمْرِنَا وَثَبِّتْ اَقْدَامَنَا وَ انْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ﴿۱۴۸﴾

*எங்கள் இறைவா! எங்களை மன்னிப்பாயாக! எங்கள் செயல்களில் எங்களின் வரம்பு மீறுதல்களையும் எங்களுக்கு மன்னித்தருள்வாயாக! எங்கள் காலடிகளை உறுதிப்படுத்துவாயாக! மேலும் நிராகரிக்கும் மக்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக!*

அல்லது இவ்வாறும் கூறலாம். எங்களது செயல்களில் எங்களது வரம்பு மீறுதல்களையும் அதனால் சில தவறுகள் ஏற்பட்டது. அவற்றை மன்னிப்பாயாக! எங்கள் பாவங்களை மன்னிப்பாயாக! எங்கு இறைவன் ஒவ்வொரு விவகாரத்தின் போதும் இறைவன் முன்னால் குனிவதற்கான துஆவை கற்றுத் தந்துள்ளானோ அங்கு வெற்றிகள் துஆக்கள் மூலமாகத்தான் கிடைக்கும். எனவே அல்லாஹ்வின் முன்பு குனியுங்கள். அவனிடம் கேளுங்கள். அதன் விளைவாக கலப்பற்ற தூய உள்ளத்துடன் துஆ செய்யும்போது அது அவனை உலக மற்றும் மறுமையில் கிடைக்கக்கூடிய நற்கூலிக்கு வாரிசாக்கி விடும் என்பதையும் அல்லாஹ் கூறி விட்டான்.

பிறகு சூரா ஆலி இம்ரானின் மற்ற வசனங்களில் அல்லாஹ் ஈமானில் மேலும் வலிமை ஏற்படுவதற்கு இந்த ஆறுதல் அளிக்கக்கூடிய சொற்களைக் கூறியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்: இவர்கள் மரணித்தவர்களல்ல. மாறாக இவர்கள் உயிருள்ளவர்கள். அவ்மாத் என்பதற்கு மரணித்தவர்கள் என்பதைத் தவிர எவருக்கு பழிவாங்கப்பட

–வில்லையோ அவர் என்ற பொருளும், இரண்டாவதாக, அவருக்குப் பின்னால் அவரது நோக்கத்தை நிறைவு செய்ய எவரும் இல்லாத நிலையில் இருக்கும் நபர் என்ற பொருளும் இருக்கின்றது. மூன்றாவதாக, அவநம்பிக்கை அடைந்தவர், துக்கத்தில் ஆழ்ந்திருப்பவர் என்ற பொருளும் இருக்கின்றது. அதாவது அல்லாஹ்வின் வழியில் மரணித்தவர்கள் மரணித்தவர்கள் அல்ல. அவர்கள் உயிருள்ளவர்களின் அணியில் இருப்பர். அவர்களது இரத்தத்திற்காக இறைவன் பழிவாங்குவான்.

இரண்டாவதாக, இந்த ஷஹீதுகளின் ஷஹாதத்தினால் அவர்களுக்குப் பின்னால் இருப்பவர்கள் பலவீனர்களாக இருப்பதில்லை. ஷஹாதத்திலிருந்தும் முழுமையாகப் பயன்பெறும் பிரிவினர் எப்போதும் இருந்து வருவார். மூன்றாவதாக, இந்த ஷஹீதுகள் இறைவன் முன்னிலையில் எத்தகு உயர் தகுதியைப் பெறப் போகின்றனர் என்றால், மேலும் அவர்களுக்கு எத்தகைய ரிஸ்க் வழங்கப்படும் என்றால் அதில் அவர்கள் மகிழ்ச்சி அடைவர். இவர்களது மரணம் இவர்களுக்கு துன்பத்தைத் தரக்கூடியதல்ல. மாறாக, அது மகிழ்ச்சிக்கான வழிவகைகளை அவர்களுக்கு வழங்கும் மரணமாக இருக்கின்றது. மறுவுலகிற்குச் சென்று அவர்களது தியாகங்கள், தியாகங்களைச் செய்ய வேண்டும் என்ற விருப்பத்தை உடையவர்களை உருவாக்குவதுன் மட்டுமின்றி இந்த தியாகங்கள் எதிரிகளுக்கு எதிரில் நமக்கு இறுதி வெற்றி கிடைப்பதற்குக் காரணமாக இருக்கும் என்ற நற்செய்தியை அவர்களுக்கு வழங்கக்கூடியதாக இருக்கும். எனவே அல்லாஹ் இந்த தியாகங்கள், இந்த பரீட்சை, இந்த தற்காலிக சோதனை நமது முன்னேற்றத்தின் வேகத்தை அதிகரிக்கக்கூடியதாக இருக்கின்றது. அவநம்பிக்கையில் தள்ளிவிடக் கூடியதாக அவை இல்லை.

***அல்லாஹ் பிரிதோரிடத்தில் இவ்வாறு கூறுகின்றான்:***

إِنَّ الَّذِينَ قَالُوا رَبُّنَا اللَّهُ ثُمَّ اسْتَقَامُوا تَتَنَزَّلُ عَلَيْهِمُ الْمَلَائِكَةُ أَلَّا تَخَافُوا وَلَا
تَحْزَنُوا وَأَبْشِرُوا بِالْجَنَّةِ الَّتِي كُنتُمْ تُوعَدُونَ ٣١

*எங்கள் இறைவன் அல்லாஹ் எனக்கூறி, இக்கொள்கையில் நிலைத்திருப்பவர்களிடம் நீங்கள் அஞ்சவும் வேண்டாம்; கவலை அடையவும் வேண்டாம்; உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சொர்க்கத்தைப் பற்றிய நற்செய்திகளை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறியவாறு அதிகமாக வானவர்கள் இறங்குவர். (41:31)*

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இது தொடர்பாக கூறுகின்றார்கள்:***

எவர்கள் எங்கள் இறைவன் அல்லாஹ் எனக்கூறி பொய் கடவுளர்களிடமிருந்து விலகி விட்டனரோ, பிறகு கொள்கையில் உறுதியாக நிலைநின்றனரோ – அதாவது பல்வேறு சோதனைகளின் போதும் துன்பங்களின் போதும் உறுதியான காலடிகளுடன் நிலைத்து நின்றனரோ அத்தகையவர் மீது மலக்குகள் இறங்குகின்றனர். நீங்கள் அஞ்சவும் வேண்டாம். கவலை அடையவும் வேண்டாம். மகிழ்ச்சி அடையுங்கள். மகிழ்ச்சியால் நிரம்பி விடுங்கள். உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட அந்த மகிழ்ச்சிக்கு நீங்கள் வாரிசாவீர்கள். நாம் இவ்வுலக வாழ்க்கையிலும் மறுமையிலும் உமது நண்பனாக இருப்போம் என்று நற்செய்தியை அவர்கள் கூறுவார்கள்.

இந்த இடத்தில் இந்த வசனங்கள் மூலமாக கொள்கையில் உறுதியாக நிலைநிற்கின்ற தன்மையின் மூலமாக (இஸ்திகாமத்) இறைவனது திருப்தி கிடைக்கும் என்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. உண்மையில் இஸ்திகாமத் அற்புதங்களை விட மேலானதாகும். முழுமையான இஸ்திகாமத் என்பது நாலாபுறமும் துன்பங்கள் சூழ்ந்திருப்பதைப் பார்த்து இறைவனது வழியில் உயிர், கண்ணியம், மதிப்பு, மரியாதை ஆகியவை அபாயத்தில் இருப்பதைப் பார்த்து, ஆறுதல் அளிக்கக்கூடிய எந்த விஷயமும் இல்லாமல், இறைவனும்கூட ஆறுதல் அளிக்கக்கூடிய கனவு, கஷ்ஃப் மற்றும் இல்ஹாம் ஆகியவற்றை நிறுத்தி விட்டு அபாயகரமான அச்சத்தில் அவரை விட்டு விட்ட பிறகும் கூட அவர் வீரமற்றவராக கோழத்தனத்தை வெளிப்படுத்துபவர் போன்று பின்வாங்காமல் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்ளும் பண்பில் எந்த தடுமாற்றமும் இல்லாமல் உண்மையிலும், உறுதியாக நிலைத்து நிற்பதிலும் எவ்வித குறைவும் ஏற்படாமல் இழிவைக் கண்டு மகிழ்ச்சி அடைய வேண்டும். மரணத்தில் திருப்தியடைந்து விட வேண்டும். உறுதியாக காலடிகளுடன் நிலைத்து நிற்பதற்காக எந்தவொரு நண்பருக்காகவும் காத்திருக்க வேண்டாம்.

ஆக, இந்த நிலைமையை நம்மில் ஒவ்வொருவரும் பெற முயற்சி செய்ய வேண்டும். இது அல்லாஹ்வின் அருள் இல்லாமல் நடக்காது. ஒவ்வொரு தியாகத்திற்கும் மனிதன் தயாராகும் அந்த நிலை ஏற்படும் போது பிறகு இறைவன் தனது அந்த அடியாரை கைவிட மாட்டான். மாறாக முன்னே சென்று அவரைப் பற்றிப் பிடிக்கின்றான். அதனால் தான் சொர்க்கம் பற்றிய நற்செய்தியை அவனுக்கு வழங்குகின்றான். காலடிகள் உறுதியாக நிலைத்து

நிற்பதற்கான துஆவையும் கற்றுத் தந்துள்ளான். எதிரிகள் மீது வெற்றி பெறுவதற்கான துஆவையும் கற்றுத் தந்துள்ளான். இதன் கருத்து இதுதான் அதாவது அல்லாஹ் இந்த துஆக்களை ஏற்றுக் கொண்டவாறு வெற்றிகளின் கதவுகளை எப்படி திறந்து தருவானென்றால் எதிரிகளுக்கு அவர்கள் வெருண்டோடுவதற்கான எந்த இடமும் இருக்காது. அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் செய்துள்ள வாக்குறுதிகள் நிச்சயமாக நிறைவேறும் இன்ஷா அல்லாஹ். மேலும் இறுதி வெற்றி உங்களுடையதாகத்தான் இருக்கும் இன்ஷா அல்லாஹ்.

இந்தத் தியாகத்தின் வரலாறை எழுதுபவர்களில், மேலும் அல்லாஹ்விடமிருந்து சுவர்க்கத்திற்கான நற்செய்திகளைப் பெறுபவர்களில் இன்று மீண்டும் நமது ஒரு சகோதரர் இணைந்துள்ளார். இவர் மதிப்பிற்குரிய ஃபதஹ் முஹம்மது சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய கலீல் அஹ்மது சாஹிப் அவர்கள் ஆவார்கள். இவர் ஷேகுபூரா மாவட்டத்திலுள்ள பெஜுவாலைச் சேர்ந்தவர் ஆவார். 2014 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் தேதி இவர் ஷஹீதாக்கப்பட்டுள்ளார். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். நடந்த சம்பவம் இதுவாகும். 2014 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் தேதி ஜமாஅத்தின் எதிரிகள் ஜமாஅத்திற்கு எதிராக கிராமத்தில் ஒட்டியிருந்த ஸ்டிக்கரை கழற்றியதன் காரணமாக வாய்ச்சண்டை ஏற்பட்டது. இதன் காரணமாக வைத்து ஷேகுபூரா மாவட்டத்தைச் சேர்ந்த பெஜுவாலில் வைத்து எதிரிகள் ஊர்வலம் நடத்தினர். Loud Speaker –ல் ஜமாஅத்திற்கு எதிராக மக்களை தூண்டக்கூடிய வகையில் சொற்பொழிவு நிகழ்த்தினர். டிராஃபிக்கை தடுத்து நிறுத்தி காவல்துறையிடம் வழக்கு தொடுக்கும்படி கோரிக்கை வைத்தனர். காவல்துறை 4 அஹ்மதி சகோதரர்களை அதாவது முபஸ்ஸிர் அஹ்மது சாஹிப், குலாம் அஹ்மது சாஹிப், கலீல் அஹ்மது சாஹிப், இஹ்ஸான் அஹ்மது சாஹிப் ஆகியோருக்கு எதிராக வழக்கு தொடுத்தது. F.I.R. பதிவு செய்து கலீல் அஹ்மது சாஹிப் அவர்களையும் குற்றம் சாட்டப்பட்டவர்களின் உறவினர்களையும் கைது செய்து சிறையில் அடைத்தனர். வழக்குப் பதிவு செய்த பிறகு குற்றம் சாட்டப்பட்ட மற்றவர்களுக்கு ஜாமீன் கொடுக்கப்பட்டு அவர்கள் வெளியில் வந்து விட்டனர். கலீல் அஹ்மது சாஹிப் அவர்களை ஜாமீனில் எடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2014 ஆம் ஆண்டு மே மாதம் 16ம் தேதி வெள்ளிக்கிழமையன்று 12:15 மணிக்கு சலீம் என்ற பெயரிலிருந்த ஒரு இளைஞர் வந்தார். அவர் அருகிலுள்ள கிராமத்தில் வசிப்பவராவார். நான் இவருக்கு உணவு கொடுக்க வந்துள்ளேன் என்று கூறியவாறு அதை சாக்காக வைத்து அவர் சிறைக்குள் சென்றார். சிறைச்சாலைக்கு அருகில் வந்து கலீல் சாஹிப் யார்? என்று கேட்டார். அவரை அடையாளம் கண்டு கொண்டதும் பிஸ்டலை எடுத்து கலீல் சாஹிபின் முகத்தில் சூட்டார். இதனால் கலீல் சாஹிப் கடுமையாகக் காயமுற்றார். கொலையாளி மற்ற கைதிகளையும் சுட முற்பட்டார். ஆனால் துப்பாக்கி செயல்படவில்லை. குண்டுகளும் சிக்கிக் கொண்டன. காவல்துறை குற்றவாளியைக் கைது செய்தது. காவல்துறை கலீல் சாஹிபை சிறையிலிருந்து வெளியே கொண்டு வந்தனர். ஆனால் ஷஹாதத்தின் பானத்தை அருந்தியிருந்தார். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். கலீல் சாஹிப் அவர்களை இவர்கள் கைது செய்திருந்தனர். ஆனால் நடந்தவை யாவும் காவல்துறை மற்றும் அரசு அதிகாரிகளின் கண்களுக்கு முன்பு தான் நிகழ்ந்தது. கொலை செய்த இந்த இளைஞரை மவ்லவிகள் அஹ்மதிய்யத்திற்கு எதிராக முற்றிலும் குருடராக ஆக்கியிருந்தனர். எனக்கு சுவர்க்கம் கிடைத்து விட்டது என்று அந்த இளைஞர் முழக்கமிட்டார். இப்படிப்பட்ட போதனைகளைத்தான் இன்றைய மவ்லவிகள் வழங்கியுள்ளனர். அல்லாஹ்வும் அவனது தூதரும் கலிமா கூறக்கூடியவர்களைக் கொலை செய்பவர்களுக்குரிய தண்டனையாக அவர் நரகத்திற்கு செல்வார் என்று கூறுகின்றனர். ஆனால், இவர்களோ அதற்கு எதிரில் அவர்களுக்கு சுவர்க்கத்திற்குரிய நற்செய்தியைத் தந்துள்ளார்.

ஷஹீது மர்ஹூமின் குடும்பத்திற்கு ஷேக்பூரா மாவட்டத்திலுள்ள பெஜுவாலுடன் தொடர்பிருக்கிறது. இவரது குடும்பத்தில் அஹ்மதிய்யத் இவரது தந்தையாரான ஃபத்ஹ் முஹம்மது சாஹிப் மூலமாக அறிமுகமானது. அவர்களின் இரண்டு சகோதரர்களான சர்தார் முஹம்மது சாஹிப் மற்றும் சவுத்ரி உமருத்தீன் சாஹிப் அவர்களுடன் இவர்கள் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் காலத்தில் 1918 ஆம் ஆண்டு பைஅத் செய்தார்கள். ஷஹீது மர்ஹூம் பிறப்பால் அஹ்மதி ஆவார்கள். ஷஹாதத் சமயத்தில் இவர்களது வயது 61 ஆகும். இவர்கள் மெட்ரிக் வரை படித்தார்கள். வாப்டாவில் வேலை பார்த்து வந்தார்கள். ஷஹாதத்திற்கு ஒன்றரை மாதத்திற்கு முன்பு தான், தான் பணிபுரிந்து வந்த துறையிலிருந்து ஓய்வு பெற்றார்கள்.

ஷஹீது மர்ஹூம் மதிப்பிற்குரிய கலீல் அஹ்மது சாஹிப் அவர்கள் தஹஜ்ஜுது தொழுபவராகவும் இருந்தார்கள். முறையாக திருக்குர்ஆனை ஓதுபவராகவும், கிலாஃபத்துடன் அன்பு மற்றும் ஆழ்ந்த பற்றுள்ளவராகவும் இருந்தார்கள். குத்பா ஜுமுஆ மற்றும் ஏனைய நிகழ்ச்சிகளை தவறாமல் கேட்டு வந்தார்கள். குழந்தைகளுக்கு அதைப் பற்றி போதித்து வந்தார்கள். வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களுடன் மிகவும் அன்புமிக்க தொடர்பு இருந்து வந்தது. அவர்களுக்கு மிகுந்த கண்ணியம் அளித்து வந்தார்கள். விருந்தோம்பல் செய்வது அவர்களது பண்பாக இருந்தது.

தலைமையக பிரதிநிதிகளுக்கு விருந்தோம்பல் செய்வதை பெருமையாகக் கருதுவார்கள். மிகவும் நேர்மையான தூய உள்ளம் கொண்ட அஹ்மதியாக அவர்கள் இருந்தார்கள். பொதுத் தொண்டுகள் செய்யும் உணர்வுகளால் அவர்கள் நிரம்பி இருந்தார்கள். பலவீனமான மற்றும் ஏழை மக்களை எல்லா வகையிலும் கவனத்தில் வைத்து செயல்பட முயற்சி செய்வார்கள். ஜமாஅத் தொண்டுகளைப் பொறுத்த வரையில் இவர்கள் பொருளாளராகவும், தஃவத்தே இலல்லாஹ் செயலாளராகவும் ஸயீம் அன்ஸாருல்லாஹ்வாகவும் தொண்டாற்றுவதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. இவருக்கு 2 மகள்களும் 2 மகன்களும் உள்ளனர். ஒரு மகன் லயீக் அஹ்மது சாஹிப் அவர்கள் ஜெர்மனியில் இருக்கின்றார். இன்னொரு மகன் இஹ்ஸான் அஹ்மது ஜெர்மனியில் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் காயிதாக இருந்து வருகின்றார்.

***முஅல்லிம் சாஹிப் எழுதுகின்றார்கள்:***

இவர்கள் மிகவும் அதிகமாக துஆ செய்யக்கூடியவராக இருந்தார்கள். மிகவும் உருக்கமாக துஆ செய்து வந்தார்கள். சுன்னத் ஆன மற்றும் ஃபர்ளான தொழுகைகளுக்குப் பிறகு எல்லாரும் பள்ளிவாசலை விட்டுச் சென்ற பிறகும் கூட இவர்கள் சுன்னத் தொழுகையையும் நஃபில் தொழுகையையும் மிக நீண்ட நேரம் வரை தொழுது வந்தார்கள். இப்போது தொழுகைக்குப் பிறகு இன்ஷா அல்லாஹ் இவர்களது ஜனாஸா காயிப் தொழுகையை நான் தொழ வைப்பேன். இதைத் தவிர ஒரு ஜனாஸா ஹாஸிர் தொழுகையும் இருக்கும். அது மவ்லவி இஹ்ஸானுல்லாஹ் சாஹிப் Retired Muallim வக்ஃபே ஜதீத் உடையதாகும். இவர்கள் இலண்டனிலிருந்து வந்தார்கள். 17 மே அன்று 83வது வயதில் இவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர்கள் காதியானிற்கு அருகில் இருந்த Ferochichi என்ற சிற்றூரைச் சார்ந்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபியான ரஹ்மத் அலி சாஹிப் அவர்களின் மகனாவார்கள். மவ்லவி ரஹ்மத் அலி சாஹிப் அவர்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காதியானிலுள்ள பெஹஸ்தி மக்பராவின் தோட்டக்காரராக நியமித்திருந்தார்கள். மவ்லவி இஹ்ஸானுல்லாஹ் சாஹிப் அவர்கள் 1949 ஆம் ஆண்டு தனது வாழ்க்கையை ஜமாஅத்திற்காக அர்ப்பணித்திருந்தார்கள். 1957 –லிருந்து வக்ஃபே ஜதீதின் முஅல்லிமாக தனது தொண்டை அவர்கள் ஆரம்பித்தார்கள். 1999 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை இந்த தொண்டில் அவர்கள் இருந்து வந்தார்கள். பணி ஓய்விற்குப் பிறகு இலண்டனிலிருந்த அவர்களது பிள்ளைகளிடம் வந்து விட்டார்கள். சிந்து மாகாணத்தில் இவர்கள் பணிபுரிந்து வந்தார்கள். எண்ணற்ற புதிய ஜமாஅத்துகளை உருவாக்குவதற்கான தவ்ஃபீக் இவர்களுக்கு கிடைத்தது. மர்ஹூம் வஸிய்யத் செய்திருந்தார்கள். இவர்களுக்கு 4 மகள்களும், 3 மகன்களும் உள்ளனர். இவரது ஒரு மகனான மஹ்மூது அஹ்மது சாஹிப் ஷம்ஸ் ஜமாஅத்தின் முரப்பியாக இருக்கின்றார்.

இன்னொரு ஜனாஸா ஹாஸிர் இருக்கின்றது. இது நஸ்ரீன் பட் சாஹிபா உடையதாகும். இவர்கள் மே மாதம் 18 ஆம் தேதி தமது 48 வது வயதில் மாரடைப்பு ஏற்பட்டு வஃபாத் ஆகியுள்ளார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இறைவனுக்கு அஞ்சுகின்ற மிக நல்ல பெண்மணியாக இவர் இருந்தார். மிகவும் செயல்படக்கூடிய உறுப்பினராக இருந்தார். சந்தாக்களை முறையாக செலுத்தி வந்தார். நான்கரை வருடங்களுக்கு முன்னதாக இவர்களது கணவர் திடீரென்று வஃபாத் ஆகி விட்டார்கள். அதற்குப் பிறகு இவர்கள் தமது பிள்ளைகளை நல்ல முறையில் வளர்த்து அவர்களுக்கு தர்பிய்யத் வழங்குவதற்கான தவ்ஃபீகைப் பெற்றார்கள். அவர்களை ஜமாஅத் அமைப்பு மற்றும் கிலாஃபத்துடன் தொடர்புள்ளவர்களாக வைத்திருந்தார்கள். கிலாஃபத்துடன் ஆழ்ந்த பற்றுடன் கூடிய நேசமிக்க தொடர்பிருந்தது. இவருக்கு 4 மகன்கள் உள்ளனர்.

அல்லாஹ் இவர்களை தனது பாதுகாப்பில் வைப்பானாக! தமது தாய் தந்தையரின் நல்ல ஆசைகள் மற்றும் துஆக்களுக்கு இவர்களை வாரிசாக்குவானாக! ஜமாஅத்துடன் தொடர்புள்ளவர்களாக இவர்கள் இருக்கட்டும்!

இந்த மூவரின் ஜனாஸா தொழுகையை நான் தொழ வைப்பேன். அல்லாஹ் இவர்களது தகுதியை உயர்த்துவானாக! இவர்களது பாவங்களை மன்னிப்பானாக! இவர்களுடன் கருணையுடன் நடந்து கொள்வானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH Mosque, London.

on **23.05.2014**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456